ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி நூலிலிருந்து**
**பராபவ ஆண்டு ஆடி மாதம் பௌர்ணமி பூஜை பலனாகவும்**
**ஓங்காரக்குடிலிற்கும், ஓங்காரக்குடிலின் நிர்வாகம், தொண்டர் பெருமக்கட்கும்**
**அன்னதானம் குறித்த இனிதே சிறப்பு ஆசி விளக்கம்**
**ஆசான் அரங்கமகா ஞானியரின் முழுமதி அருளாசி நூல்**

**29.07.2026**

1. ஆனந்த நடனமிட்ட ஈசன் பாதம்
அடிவணங்கி அரங்கன் யான் அருளாசி
ஞானமோடு என் சீடர் பெருமக்களெல்லாம்
ஞானம் பெற வேண்டியும் ஞானிகளுடைய

2. ஆசி அனுகூலத்தோடு ஞானபண்டிதன்
அனுகூலமும் பெற்று இவர்கள் சிறக்கவும்
ஞானதேசிகன் யான் நிறுவிய ஓங்காரக்குடிலில்
ஞானிகள் பூஜையும் தடைபடா வண்ணம்

3. தொடர் தர்மமும் இனிதே சிறக்கவும்
அரங்கன் யான் உற்ற துணை நின்று
அருளாசி வழி இவர்கட்கு வழிகாட்டி
அருள்புரிகின்றேன் அவ்வாறு பராபவ ஆண்டு

4. ஆடி திங்கள் பௌர்ணமி நன்னாளில்
அரங்கன் என் பீடத்திலே
பௌர்ணமி பூஜை மிகச் சிறப்பாகவே
நடந்தேறியது இவ்விழாவில்

5. எண்ணற்ற அன்பர் பெருமக்களும்
சூட்சுமமாய் ஞானியர்களும் வந்து
ஓங்காரக்குடிலின் அருளமுது உண்டு சென்றனர்
இங்கே அன்பர்கட்கெல்லாம் அரங்கன் யான்

6. ஜோதி ரூபில் பல்வேறு அற்புதங்களும்
சூட்சும ஆசியும் தந்துள்ளேன்
உள்ளபடி இன்று விழா மிகச்சிறப்பாக
என் தொண்டர்களெல்லாம் உயர் சேவையாற்ற

7. இனிதே நடந்தேறியது இவ்விழாவில்
அரங்கன் யான் ஆறுமுகனோடு இணைந்து
பரிபூரண ஆசி தந்துள்ளேன்
உள்ளபடி இவ்விழாவின் குடிலமுது

8. அருமருந்தாக ஆக்க சக்தி கொண்டு
இன்று உணவு உண்டவர்கட்கெல்லாம்
இனிதே ஆரோக்கியம் பலம் திடம்
சர்வ பலமும் பெற ஆக்கமாக அருளியுள்ளது

9. உள்ளபடி இது நன்னாளில்
தொண்டாற்றிய தொண்டர் பெருமக்களும்
இனிதே இந்த தர்மத்தில் பொருளுதவி செய்துகொண்டு
தர்மவானாக வந்து சென்றவர்கள் அனைவருக்கும்

10. அரங்கன் என் பரிபூரண ஆசி அனுகூலம் உண்டு
இந்தவித ஆடி பௌர்ணமி நன்னாளில்
விழாவிற்கு பொருளுதவி செய்தவர்களும்
விழாவில் உயர் தொண்டும்

11. உடல் உழைப்பும் தந்தவர்களும்
அனைவருக்கும் ஞானிகள் ஆசியோடு
இவர்களெல்லாம் ஞானவான்களாய்
தர்மவான்களாய் சிறந்து ஞானியாக உண்டான

12. வாய்ப்பும் பெற்று சிறக்க இன்று
வரம் தந்துள்ளேன் உள்ளபடி என்
அரங்கன் ஆசியோடு உயர்வாக
வந்தவர்கட்கெல்லாம் பிணி நீக்கம் கண்டும்

13. பிறவா பெரும்பேறு என்கின்ற
உயர்நிலை கொண்டும் அவர்களெல்லாம்
சிறக்க அரங்கன் என் பரிபூரண ஆசியுண்டு
ஓங்காரக்குடிலின் நிர்வாகத்தையும்

14. உயர்வாய் அரங்கன் யான்
நிர்வகித்து வருவதாலே குடிலின்
நிர்வாகம் சிறப்பு தொண்டர்
பெருமக்களின் உழைப்பும் ஒத்துழைப்பும் சிறப்பு

15. வகைபட இன்னும் உயர்வான
அணுக்க தொண்டர்கள் பெருக
சரணாகதி மிக்க ஆற்றல்மிக்க
தொண்டர்களும் வந்து சேர

16. இன்னும் நிர்வாகம் சிறக்கும்
நிர்வாகம் விரிவடையும்

இதனோடு அளவிலா வண்ணம்
இன்னும் எண்ணற்ற கிராமங்கள்

17. ஓங்காரக்குடிலோடு இணைய
கிராம அன்னதானங்களும் விரிவடைய
அரங்கன் என் பரிபூரண ஆசியுண்டு
ஆசி பெற்ற அன்பர் பெருமக்கள்

18. அனைவருக்கும் அரங்கன் எண்ணிய கணமே
வந்தருளும் ஆற்றலாக நிரம்பியுள்ளேன்
உள்ளபடி என் நாமஜெபம் போற்றி
எங்கு தர்மம் நடக்கின்றதோ

19. என் நாமஜெபம் போற்றி
எங்கு ஜோதி ஏற்றி
ஞானிகள் பூஜை நடக்கின்றதோ
அங்கெல்லாம் அக்கணமே அரங்கன்

20. யான் வந்து அருள் புரிகின்றேன்
ஆக்கமும் அனைத்துமாக நிரம்பி
அற்புதமும் நிகழ்த்துகின்றேன்
அன்னதனால் இந்தவித விசேட

21. பௌர்ணமி தொட்டு இன்னும்
அன்பர்களுக்கு அதீத சக்தியும் வரமும்
அளவில்லா வண்ணம் பாதுகாப்பும்
அன்பர்கள் படை இன்னும் பெருகும் வண்ணம்

22. அனைத்து தேசங்களிலும் இறங்கி
அரங்கன் யான் அருள் புரிகின்றேன்
தேசங்கடந்து என் சேவையை
அன்பர்கட்கு கொண்டு செல்லுகின்ற

23. மக்களுக்கெல்லாம் சகலதுமாக
கலந்து அரங்கன் யான்
இணைந்துள்ளேன் அனைத்து தேசங்களிலும்
ஓங்காரக்குடிலின் கிளை சங்கமாக

24. உயர்வுபட நடத்துகின்ற எல்லா தடத்திலும்
ஜோதியுள் யானே நிரம்பி
அவர்கட்கு கவசமாய் உள்ளேன்
உள்ளபடி பேரிடர் பெரும்போரென

25. இன்னல்கள் வந்தாலும்
சர்வத்திலும் என் பாதுகாப்பு
பரிபூரணமாய் உண்டு உண்டு
கலகம் இடர் துன்பம் என

26. இயற்கை வழியான இடர்கள் வந்தபோதும் அங்கே
எங்கு என் நாமமும் ஜோதியும்
என்பேரிலான தர்மமும் நடக்கின்றதோ
அங்கெல்லாம் யான் கவசமாய் இருந்து

27. பாதுகாப்பு தந்து அருள் புரிவேன்
அருள் பெற என் பலம் உண்டு உண்டு
அரங்கன் யான் அருளிய
ஆசி விளக்கம் முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி